## மெட்ரோ ரயிலில் 6 மாதத்தில்

# 20,000 மாணவர்கள் கல்வி சுற்றுலா



சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் மற்றும் சர்வதேச மனித மாண்புகள் சங்கம் இணைந்து திருமங்கலம் முதல் விமானநிலையம் வரையிலான வழித்தடத்தில் மாற்றுத்திறனாளி மாணவிகள் இலவச சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர்.

சென்னை,நவ.19:சென்னை மெட்ரோ ரயில் கடந்த 6 மாதத்தில் 20 ஆயிரத்து 300 மாணவர்கள் கல்வி சுற்றுலா அழைத்து செல்லப்பட்டுள்ளதாக மெட்ரோ ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் மற்றும் சர்வதேச மனித மதிப்புகள் சங்கம் இணைந்து நேற்று காலை திருமங்கலம் முதல் விமானநிலையம் வரையிலான வழித்தடத்தில் சுமார் 40க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் இலவச சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர்.

இவர்களுடன் 5 சமூக ஆர்வலர்களும் பயணம் செய்தனர். அவர்களுக்கு மெட்ரோ ரயில் சேவை மற்றும் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இதுபோல் விமானநிலையம் முதல் டி.எம்.எஸ் வரையிலான வழித்தடத்தில் அரசு பள்ளி மாணவர்கள் கல்வி சுற்றுலா சென்றனர். மாணவர்களுக்கு மெட்ரோ ரயிலின் சிறப்பம்சங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது.

மெட்ரோ ரயிலில் கடந்த ஜூன் மாதம் முதல் இதுவரையில் 20 ஆயிரத்து 300 மாணவர்கள் கல்வி சுற்றுலா அழைத்துசெல்லப்பட்டு பயனடைந்துள்ளனர்.

அக்டோபர் மாதத்தில் மட்டும் 3 ஆயிரத்து 90 மாணவர்கள் கல்வி சுற்றுலா மேற்கொண்டு பயன் அடைந்துள்ளனர். இவ்வாறு கூறினார்.